**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 16.02.2026**
**OS. No. 99/2018**
**வழக்கு சாட்சி PW.1– வேணு, த/பெ.கலைகோவன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 4 முதல் 9, 14, 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**4 முதல் 9, 14, 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) எங்கள் சொத்தின் எல்லைகளை தீர்மானித்து பட்டா வழங்கவேண்டும் என்று கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதிகள் ரவிசந்திரன், தெய்வாணை, கண்ணன் மற்றும் வருவாய் துறையினர், மின் வாரிய துறையினர், பதிவு துறையினர் மற்றும் பஞ்சாயத்து அலுவலர்கள் ஆகியோர்கள் மீது தாக்கல் செய்துள்ளேன். வருவாய் துறையினரிடம் உட்பிரிவு செய்தததது தவறாக உள்ளதாகவும், புதியதாக பட்டா வழங்கவேண்டும் என்றும், மின் வாரிய துறையினரிடம் பக்கத்து நிலத்துக்காரர்களுக்கு மின் இணைப்பு தருவதற்கு எங்கள் நிலத்தில் கம்பம் வைக்க கூடாது என்றும், பஞ்சாயத்து அலுவலர்கத்தின் காம்பௌண்ட் சுவரானது எங்கள் நிலத்தில் கட்டியுள்ளதால் அதை அகற்றுமாறும், பரிகாரம் கோரியுள்ளோம். பதிவு துறையினரிடம் உட்பிரிவு செய்யும் வரை சொத்தில் எந்த வில்லங்கமும் பதிவு செய்யக்கூடாது என்று பரிகாரம் கோரியுள்ளோம்.

2) 1 முதல் 3 பிரதிவாதிகள் என் உறவினர்களா என்றால் இல்லை, பக்கத்து நிலத்துக்காரர்கள் ஆவார்கள். நான் ச.எண்.75/2F ல் கண்ட சொத்து பொறுத்து பரிகாரம் கோரியுள்ளேன். அந்த சொத்தின் மொத்த விஸ்தீரணம் 2180 சதுரடி ஆகும். அந்த சொத்து என் தந்தை காலி மனையாக பிப்ரவரி மாதம் 2012 ம் வருடம் கிரையம் பெற்றார். மேற்படி கிரையம் பெற்ற சமயத்தில் நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். அந்த நிலத்தின் நீள, அகலம் மற்றும் அதன் சக்குபந்திகள் ஆகியவை சரிபார்த்துதான் கிரையம் பெற்றோமா என்றால் ஆமாம். தாவா சொத்தின் தெற்கு பக்கம் கண்ணன் என்பவரின் வீடும், மேற்கு ச.எண்.75/2D ல் கண்ட சொத்தும், வடபுறம் பஞ்சாயத்து அலுவலக காம்பௌண்ட் சுவரும், கிழக்கு புறம் நெடுஞ்சாலை ரோடும் உள்ளது.

நாங்கள் நிலத்தை கிரையம் பெற்றபோதே பஞ்சாயத்து காம்ளெண்ட் சுவர் இருந்ததா என்றால் சரியாக நினைவில்லை.

3) ச.எண்.75/2D ல் ஆனது தெய்வானை மற்றும் ரவிசந்திரன் ஆகியோர்களின் காலி மனை ஆகும். நங்கவள்ளி – குஞ்சாண்டியூர் செல்லும் தார் சாலை தான் கிழக்குபுறம் அமைந்துள்ளது. மேற்படி சாலையானது MDR ரோடு என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும், எங்களுக்கும் உள்ள பிரச்சனை சம்மந்தமாக தான் வழக்கு என்றால் சரிதான். 10 பிரதிவாதி நிலத்தை ஆக்கிரமித்து கட்டியதாக நான் சொல்லியுள்ள நிலையில் 10 பிரதிவாதியின் உயர் அதிகாரிகளிடம் ஏதேனும் மனு மற்றும் புகார் அளித்துள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை.

4) 9 ம் பிரதிவாதி களப்பணி மேற்கொள்ளமல் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் 6 ம் பிரதிவாதி 30.09.2015 ம் தேதியில் உத்தரவு பிறப்பித்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் இது குறித்து 6 ம் பிரதிவாயின் உயர் அதிகளான சார் ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் புகார் ஏதேனும் அளித்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக ஏற்பட்டுள்ள தவறுகள் குறித்து மேற்கண்ட நபர்களிடம் முறையாக மனு கொடுத்திருந்தால் வருவாய் நிலை ஆணைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் என்றும், நான் மனு கொடுக்காததால் தான் அவர்களால் நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்றால் சரியல்ல. வருவாய் நிலை ஆணைகளின் படி தாசில்தார் பிறப்பித்த உத்தரவின் பேரில் மாற்ற கருத்த இருந்தால், மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல் முறையீடு செய்யவேண்டும் என்றும், நேரடியாக சிவில் வழக்கு தாக்கல் செய்வதற்கு சிவில் நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் நான் மனு அளித்திருப்பேன் என்றும், நான் வேண்டுமென்றே பொய்யாக அரசு அலுவலர்கள் மீது தவறுகள் கூறி, வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) 10 பிரதிவாதி 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் சேர்ந்து தாவா சொத்துக்களை அளவீடு செய்வதை எவ்வித முகாந்திரமும் இன்றி தடுத்துவிட்டதாக நான் சொல்லியுள்ள

நிலையில், அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் மீது காவல் துறையில் ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எங்களுக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும உள்ள தனிப்பட்ட பிரச்சனை காரணமாகத்தான் வழக்கு என்றும், அரசு அதிகாரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித தனிப்பட்ட பிரச்சனையும் இல்லை என்றால் சரியல்ல. அரசு அதிகாரிகளை பொறுத்தவரையில் சட்டவிதிமுறைகளின் படி தான் செயல்பட்டுள்ளனர் என்றும், அதனால் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.